1986 மே 3]

திரு. மு. ஆனந்தன் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே தியாகதுர்க்கம் வட்டத்தில் ஈயனூர் என்ற கிராமத்தில் ஒரு கட்டடம் கட்டப்பட்டது. அங்கே பல்நோக்குப் பெண் மருத்துவப் பணியாளர் 6 ஆண்டுக்காலமாகப்போடாமல் இருக்கிறது. 1982 ஆம் ஆண்டிலே முன்னாள் அமைச்சர் திரு. ராகவானந்தம் அவர்கள் வருகை தந்து அதைத் திறந்தார்கள். அங்கே அதிலிருந்து மருத்துவப் பணியாளர் நியமிக்கப்படவில்லை. எப்போது நியமிப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, முழுவிவரங்களையும் கொடுப்பார்களானால் உடனடியாகக் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்.

619—(*வினா எண் 7485) **திரு. பரிதி இளம்வழுதி :** மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில், கைத்தறி நெசவாளர்களுக்கு இன்ஸ்யூரன்ஸ் அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழகத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் அளிக்கும் திட்டம் ஏற்கனவே அமலில் உள்ளது. மூன்று வகையான திட்டங்கள் இருக்கின்றன. கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு மட்டும் பொருந்தும்படியான திட்டம். நெசவாளர்கள் தாங்கள் பெறும் சம்பளத்தில் ரூபாய்க்கு ஆறு பைசா கட்ட வேண்டும். கடைசியில், அவர் இறந்த பிற்பாடு 3,000 ரூபாய் ஆயுள் காப்பீட்டுக் கழகமும், 1—7—1984 முதல் கோவாப்டெக்ஸ் 2,000 ரூபாயும் சேர்த்து 5,000 ரூபாய் கொடுத்து வருகிறது. இன்னொரு திட்டம், விபத்து பாதுகாப்பு திட்டம். இதற்கு நெசவாளர் பணம் எதுவும் கட்ட வேண்டியதில்லை. ஆனால், தனியார் துறைக்கு மாத்திரம் பொருந்தும். வேலை செய்கிற பொழுதே இறந்துவிட்டால் அவர்களுக்கு 10,000 ரூபாய்

[1986 மே 3

கொடுக்கப்படும். இன்னொரு திட்டம் இருக்கிறது. ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வு உதவி சிறப்புத் திட்டம். இதன் பிரகாரம் கூட்டுறவு நெசவாளர் அல்லது தனியார் துறையில் வேலை செய்யும் நெசவாளர் மாதம் ஒன்றுக்கு பத்து ரூபாய் கட்டினால் 55 அல்லது 58-வது வயதில் ஓய்வு பெறும்போது 33,500 ரூபாய் பெறுவார்கள்.

வட ஆற்காடு மாவட்டத்தில் புதிய பட்டு கூட்டுறவு சங்கங்கள்.

620—(*வினா எண் 8879) திரு. த. பழனி: மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம், ஆற்காடு வட்டம், ஆற்காடு, திமிரி, கலவை, விளாப்பாக்கம், வாழைப்பந்தல் ஆகிய இடங்களில் பட்டு கூட்டுறவு சங்கம் புதியதாக அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: அப்படி அரசின் பரிசீலனையில் எதுவும் இல்லை.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான ஆற்காட்டில், ஆற்காடு வட்டம், ஆற்காடு, திமிரி, கலவை, விளாப்பாக்கம், வாழைப்பந்தல் ஆகிய கிராமங்களில் பட்டு கைத்தறி நெசவாளர் தொழிலாளர்கள் பல நூறு கிலோமீட்டர்களுக்குச் சென்று பல்வேறு இடங்களில் உள்ள, உதாரணமாக காஞ்சிபுரம், ஆரணி போன்ற இடங்களுக்குச் சென்று அவர்கள் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறது. இதனால் அவர்களுடைய குடியை உயர்த்தி இல்லங்களைக் கவனிக்க முடியாமல் இருக்கிறது என்ற சூழ்நிலை உள்ளது. எனவே, அந்தப் பகுதியில் உள்ள தொழிலாளர்களுக்காகப் பட்டு கூட்டுறவு சங்கம் அமைத்துத் தருவதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.